செ.வெ.எண்: 707/2016 நாள்: 08.10.2016

# பத்திரிகைச் செய்தி

ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 13-ம் நாளை சர்வதேச பேரிடர் குறைப்பு தினமாக அறிவித்துள்ளது. அதன்படி இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் ஒவ்வொரு ஆண்டும் பேரிடர் குறைப்பு தினமாக செயல்படுத்தி வருகிறது.

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாக சார்பில் இந்த ஆண்டு அக்டோபர் 13-ம் நாள் இத்தினத்தை சிறப்பாக நடத்துவதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 9.30 மணி அளவில் SLB மேல்நிலைப்பள்ளியில் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைக்க உள்ளார். அதனை தொடர்ந்து தீயணைப்புத் துறையினரின் பேரிடர் ஒத்திகையும், பள்ளி மற்றும் கல்லூரி அளவிலான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் நடைபெறவுள்ளது. போட்டியில் பங்கேற்க விருப்பமுள்ள் L.K.G முதல் மேல்நிலை வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவியர்கள் காலை 9.00 மணிக்கு S.L.B பள்ளி தலைமையாசிரியரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் கல்லூரி மாணவர்கள் கன்னியாகுமரியில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக உறுப்பு கல்லூரி முதல்வர் அவர்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**போட்டிகளுக்கான தலைப்பு - ஓவியப்போட்டி**

| | | |
|---|---|---|
| L.K.G முதல் 1-ம் வகுப்பு | - | இயற்கை காட்சி |
| II$^{nd}$ முதல் V வரை | - | கடற்கரை காட்சி |
| VI முதல் VIII வரை | - | அணைக்கட்டு |
| IX முதல் XII வரை | - | சுனாமி தடுப்பு |

**கட்டுரைப் போட்டி**

| | | |
|---|---|---|
| VI முதல் VIII வரை | - | பேரிடர் மேலாண்மை |
| IX முதல் XII வரை | - | பேரழிவும் தடுப்பு முறைகளும் |

**பேச்சுப்போட்டி**

| | | |
|---|---|---|
| II முதல் V-ம் வகுப்பு வரை | - | இயற்கை அன்னை |
| VI முதல் VIII-ம் வகுப்பு வரை | - | பெருவெள்ளமும் தற்காப்பும் |
| IX முதல் XII-ம் வகுப்பு வரை | - | இயற்கை அன்னையின் சீற்றம் தடுப்போம் |

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.